# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## Held in May 2007

## ECS 1.21 – INTRODUCTION TO MACRO ECONOMICS

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) பேரினப் பொருளியலின் பல்வேறு மாறிகளைப் பேரினப் பொருளாதார குறிக்கோள்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

(இ) நிறை தொழில் மட்டத்தை அடைதல் என்ற பேரினப் பொருளாதாரக் குறிக்கோள் நடைமுறையில் ஏனைய பேரினப் பொருளதாரக் குறிக்கோள்களுடன் எவ்வாறு முரண்படுகின்றது என்பதனை விளக்குக. (08 புள்ளிகள்)

02 (அ) பணத்துக்கான கேள்வி என்பதனால் நீர் கருதுவது யாது? (04 புள்ளிகள்)

(ஆ) "கொடுக்கல் வாங்கல், பாதுகாப்பு நோக்கம் குறித்த பணக்கேள்விகள், பணம் ஒரு பரிமாற்று ஊடகம் என்ற தொழிற்பாட்டின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டவையாகும்." விளக்குக (10 புள்ளிகள்)

(இ) உத்தேச நோக்கம் குறித்த பணக்கேள்வியானது வட்டிவீதத்துடன் எதிர்க்கணியத் தொடர்பைக் கொண்டிருக்கின்றது என்ற கெயின்சின் கருத்தினை விளக்குக. (06 புள்ளிகள்)

03. (அ) வர்த்தக வங்கிகளின் கொடுகடன் நடவடிக்கைகளுக்கும் பணவீக்கத்திற்குமிடையிலான தொடர்பினைப் பரிசீலனை செய்க (08 புள்ளிகள்)

(ஆ) வர்த்தக வங்கிகளின் இலாபத்தினை உச்சப்படுத்தல் திரவத்தன்மையைப் பாதுகாத்தல் ஆகிய இரு நோக்கங்கள் முரண்படும் விதத்தை விளக்குவதுடன், வங்கிகள் அதனை எவ்வாறு தீர்க்கமுனைகின்றன என்பதனையும் விளக்குக. (12 புள்ளிகள்)

04. (அ) குறித்த ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானம், சராசரி நுகர்வு நாட்டம் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன. (தொகைகள் யாவும் மில்லியன் ருபாவில்)

| வருமானம் (Y) | சராசரி நுகர்வு நாட்டம் (APC) |
|---|---|
| 500 | 0.9 |
| 600 | 0.85 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் காண்க

(1) எல்லை நுகர்வு நாட்ட (MPC) ப் பெறுமதி (04 புள்ளிகள்)
(2) நுகர்வுச் சமன்பாடு (06 புள்ளிகள்)
(3) வருமானப் பெருக்கியின் பெறுமானம் (04 புள்ளிகள்)

(ஆ) மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றிற்கான வருமானச் சுற்றோட்ட மாதிரியை வரைந்துகாட்டுக. (06 புள்ளிகள்)

05. (அ) இச்சையுள்ள வேலையின்மை, இச்சையற்ற வேலையின்மை என்னும் பதங்களை வேறுபடுத்துக.? (06 புள்ளிகள்)

(ஆ) வேலையின்மை ஒரு பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதக விளைவுகளைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(இ) இலங்கையின் வேலையின்மையில் காணப்படும் முக்கிய பண்புகளை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ஈ) இலங்கையின் தற்போதைய வேலையின்மை மட்டம்யாது? (03 புள்ளிகள்)

06. (அ) சென்மதி நிலுவைப் பிரச்சினை என்பதனால் கருதப்படுவது யாது? (08 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீரப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய குறுங்கால, நீண்டகால அடிப்படைகளிலான நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள்)

07. (அ) திறந்த பணவீக்கத்தை அமுக்கிய பணவீக்கத்திலிருந்து வேறுபடுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) கேள்வித்தூண்டல் பணவீக்கம் எவ்வாறு செலவுத்தூண்டல் பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லும் என்பதனை விளக்குக. (08புள்ளிகள்)

(இ) பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகள் யாவை? (06புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பெழுதுக.

(அ) சேயின் சந்தைகள் பற்றிய விதி ( Say's Law of Markets)

(ஆ) பிலிப்ஸ் வளையி

(இ) தேசிய உற்பத்திச் சுருக்கி

(ஈ) மாற்றுச் சமன்பாடு (4 X 5 = 20 புள்ளிகள்)

***